بسم الله الرحمن الرحيم

**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.'.பா 23/09/2016**

**(21 Dhul-Hijjah 1437 HIJRI)**

## “TIME: A PRECIOUS ASSET”

# “நேரம் : விலைமதிக்கயியலாத செல்வம்”



**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலக மக்களுக்கு சலாம் தெரிவித்தப் பிறகு தஷஹ்ஹுதும் தஅவதும், அல்.'.பாத்திஹாவும் ஓதிக் கொண்டு ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்கள் கீழ் வருமாறு தன் பேருரையை ஆரம்பித்தார்.

**“ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள் மேலும் ஒவ்வொரு வரும் நாளைக்காக தான் முற்படுத்தி வைத்திருப்பதை பார்த்துக் கொள்ளட்டும். இன்னும் நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடந்துக் கொள்ளுங்கள். நீங்கள் செய்பவற்றை நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன்” (59-19).**

மாதங்கள், வருடங்கள், இரவுகள், பகல்கள் இவையாவும் செயல்கள் செய்வதற்கான நேரங்களாகும். வாழ்க்கையின் நீட்சியை திட்டப்படுத்துவதற்கான அளவு கோல்கள் ஆகும். இவையனைத்தும் திடீரென முன் செல்வதும் முடிவடைந்து விடுவதும் ஆகும். இரவும் பகலும் நிரந்தரமாக சென்றடைந்துக் கொண்டிருக்கின்றது. நேரம் என்பது, மிக தொலைவானதை அருகாமைப்படுத்திக் கொள்வதாகும். அது நவீனமானதைப் படைத்துக் கொள்ளவும் திடமானதை பலவீனமாக்கிக் கொள்வும் செய்கின்றது. எதிர்காலத்திற்காக என்னவெல்லாம்

கனவுகள் நாம் தக்க வைத்துக் கொள்கின்றோம். ஒன்றும் பலன் காணாமல் செல்கின்றது!. நாளைக்கான எவ்வளவு எதிர்பாரல்கள் வெற்றியடையாமல் செல்கின்றது.

**“ஆனால் அல்லாஹ் எந்த ஆன்மாவுக்கும் அதன் தவணை வந்துவிட்டால் அதனைப் பிற்படுத்த மாட்டான். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கு தெரிந்தே இருக்கின்றான் (63-12).**

நம் வாழ்க்கையில் ஒரு வருடம் மூன்று மாதங்களைப் போன்று முடிவடைகின்றது. அதாவது இவ்வுலகம் நிரந்தரமானதல்ல என்று அது நம்மை ஞாபகப்படுத்திக் கொள்கின்றது. மேலும் சற்று விளக்கமாக கூறிக் கொண்டால், இவ்வுலகம் ஒரு கெணியை போன்றாகும். மக்களை எத்தனைத் தடைவ அது வஞ்சனைக்கு ஆளாக்கிக் கொண்டது. இங்கு நிரந்தரமாக வாழ்ந்திருப்போம். என்ற எண்ணத்தில் மூழ்கியிருந்த எத்தனை நபர்களை எத்தனை முறை அது கொலை செய்து கொண்டது? அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என் தோளில் கை வைத்துக் கூறினார். நீ இந்த உலகைக் கண்டு கொள்ள வேண்டியது ஒரு அறிமுகமில்லாதவரை போலவும் அல்லது ஒரு பயணியைப் போலவே ஆக வேண்டும். இப்னு உமர் (ரலி) அவர்கள் சாதரணமாக கூறுவார்கள் **“மாலைப் பொழுதில், விடியற் காலம் வரையில் வாழ்ந்திருப்போம். என்று எண்ண வேண்டாம். விடியாற் காலத்தில், மாலை வரையில் வாழ்ந்திருப்போம் என்றும் எண்ண வேண்டாம். ஆரோக்கியத்தை இழப்பதற்கு முன்னவே ஆரோக்கியமான நேரத்தைப் பயன்படுத்துங்கள். உங்கள் மரணத்திற்கு முன்னவே உங்களின் வாழ்க்கையிலிருந்து சம்பத்தை கைவசப்படுத்துங்கள்.”** (புகாரி)

நமக்கு சாதகமாகவோ சாதகமின்றியோ வருடங்கள் கடந்து செல்கின்றது. நமது வாழ்க்கையில் நற்செயல்களை நாம் அதிகரித்திட வேண்டும். மரணம் என்னும் அரக்கன் நம் மீது வெற்றி வாயினை சூடிக் கொள்வதற்கு முன்னவே, நாம் இழந்ததை வாழ்க்கையில் திரும்ப பெறவும் நாம் இழந்த நேரத்தை அனுபவித்துக் கொள்ளவும் வேண்டும்.

‘‘ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். தூய தூதர் முஹம்மது (ஸல்) ஒரு வரை உபதேசித்துக் கொண்டதாவது, ஐந்து விஷயங்கள் நிகழ்வதற்கு முன்னவே ஐந்து விஷயங்களில் லாபம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

1. **முதுமை அடைவதற்கு முன்னவே இளமையைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.**
2. **நோய்யாளியாகுவதற்கு முன்னவே ஆரேக்கியமனதைப் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.**
3. **நீங்கள் வறுமை அடைவதற்கு முன்னவே உங்கள் செல்வத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.**
4. **நீங்கள் வேலைச் செய்யாமல் இழக்கச் செய்கிற ஒய்வு நேரங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.**

5. **உங்கள் மரணத்திற்கு முன்னவே வாழ்க்கையினைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். காரணம் இவ்வுலக வாழ்க்கைக்கு பிறகு மன்னிப்பிற்கான சூழ்நிலையில்லை. இவ்வுலகமனைக்கு பிறகு சொர்க்கமோ, நரகமோ அன்றி வேறொரு மனையில்லை''**

இமாம் அபுமாலிக் அல் அஷ் ஆரி (ரலி) அவர்கள் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக சொல்கின்றார்.

''ஒவ்வொரு மனிதனும் தனது ஆன்மாவை விற்பதற்காக காலையில் வெளியே செல்கின்றான். மேலும் அவன் அதை சுதந்திரமாக்கிக் கொள்ளவோ அழித்துக் கொள்ளவோ செய்கின்றான் '' (முஸ்லீம்)

அப்துல்லாஹ் இப்னு மஸ் ஊத் (ரலி) அவர்கள் கூறியதாக ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கின்றது.

**விதி நாளில் தன் இறைவனின் முன் மனிதனின் இரு கால்களும் அசைந்துக் கொள்வதில்லை. தனது வாழ்க்கையைக் குறித்து ஐந்து விஷயங்களை வினாவும் வரையில்**

1. **தனது வாழ்க்கையினை அவர் எவ்வாறு செலவு செய்தார்.**
2. **தனது இளமையை எவ்வகையில் அவர் வினியோகம் செய்தார்.**
3. **தனது செல்வங்களை எங்கிருந்து அவர் சோர்த்தார்.**
4. **தனது செல்வங்களை அவர் எவ்வாறு செலவு செய்தார்.**
5. **அவர் பெற்றுக் கொண்ட ஞானத்திலிருந்து அவர் எவ்வகையில் செயல்ப்பட்டார். ( தீர்மிதி)**

இப்னு மஸ் ஊத் (ரலி) அவர்கள் கூறுகின்றார். **''சூரியன் மறைந்துக் கொள்ளும் நேரத்தில் ஒரு விஷயத்தைக் குறித்து நான் கவலைப் படுவது போன்று வேறெந்த விஷயத்திலும் நான் கவலைப்பட்டதில்லை. என் வாழ்க்கை சுருங்கிக் கொண்டது. நான் என் நன்மைகளை அதிகரித்துக் கொள்ளவுமில்லை''**.

தூய தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். **''ஆயுள் நீண்டதாக இருக்கவும் வாழ்க்கையை பரிபூரணமாக்கி கொள்ளவும் செய்பவனே உங்களில் மிக சிறந்தவன் – உத்தமன்''** (திர்மதி)

அபுபக்கர் (ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்கின்றார். ஒருவர் கேட்டார். **''அல்லாஹ்வின் தூதரே! மனிதர்களில் மிக சிறந்தவன் யார்? அன்னார் பதிலளித்தார். ஒருவருக்கு ஆயுள் நீண்டதாகயிருக்கவும் நற்செயல் ஆற்றிக் கொண்டிருக்கவும் செய்பவனே உங்களில் சிறந்தவன். அந்நேரம் அம்மனிதன் மேலும் வினாவினார். மனிதர்களில் மிக மோசமானவன் யார்? தூய தூதா (ஸல்) அவர்கள் கூறினார். ஆயுள் நீண்டதாயிருக்கவும் தீய செயல்கள் செய்பவனாகயிருக்கவும் செய்பவன்''** (புகாரி)

முஸ்லீம் ரிப்போர்ட் செய்த ஒரு நபி மொழியினை நாம் மறவாமல் இருப்போம் **''பகல் தவறு செய்யவும் இரவில் அதை எண்ணி வருந்தவும் செய்கின்றவர்களுக்கு பாவ மன்னிப்பு அளிப்பதற்கு அல்லாஹ் அவனது இரண்டு கரங்ளையும் திறந்து வைத்திருக்கின்றான்''**.

நாம் ஒவ்வொரு வரும் சுயமாக ஒரு சர்ச்சை நடத்திக் கொள்வோம். அப்பொழுது, நாம் மகிழ்ச்சியுடையவர்களாவோமா அல்லது கவலையுடையவர்களாவோமா? தவறுகளைச் சரிச் செய்து நன்மையின் பால் முன்னேற்றமடைந்தால் நிச்சயமாக அவர் ஆன்மாவு வெற்றியடைந்து விடும். மரணத்திற்கு முன்னவே அந்த இடத்தை சென்றடைய குதித்தோடுவோம். அந்த மனைகளுக்கு நாசம் ஏற்படுவதில்லை. அங்கு இளமை முடிவடைவதில்லை. அங்குள்ள அழகுக்கு இழப்பு ஏற்படுவதில்லை. தூய தூதர் (ஸல்) கூறினார். **"எவர் சொர்க்கத்தில் நுழைகின்றாரோ அவர் பாக்கியமுடையவராக வாழ்வார். மரணிப்பதில்லை. அவரது ஆடைகள் கறையாவதில்லை. அவரது இளமை முடிவடைவதுமில்லை"** (முஸ்லீம்)

எந்நேரமும் நினைவுக் கொள்ளுங்கள் இவ்வுலகம் தற்காலிகமாகும். நமது உண்மையான மனை இவ்வுலகமல்ல. அம்மனையை இதற்கு முன் நாம் ஒரு பொழுதும் கண்டதில்லை. அது நமக்காக திறக்கப்பட வேண்டும். உண்மையில் அற்புதமான மகிழ்ச்சி என்பது எல்லா வல்ல இறைவன் தனது அன்பாளராகிய அடியார்களுக்காக அதைப் பாதுகாத்து வைத்திருக்கின்றான். பாவ மன்னிப்பு வழியாக இறைவனை நினைவுக் கூறுபோர்களுக்கும், தங்களின் தவறுகளையும் குற்றங்களையும் அழித்துக் கொள்ள முயற்சி செய்வோர்களுக்காகவும், முற்றிலும் சிறந்த இறை உண்மையை போதிப்பதற்காக வாழ்க்கையினை சமர்பித்துக் கொள்வோர்களுக்காகவும், அவனையன்றி மற்றொருவரையும் வணங்காமல் இருப்போர்களுக்காகவும் (இறைவன் சொர்க்கத்தை பாதுகாத்து வைத்திருக்கின்றான்) இவ்வகையாளர்களுக்கு அவர்களின் பிரதிபலன் முழுமையாக வழங்கப்படுவதாகும்.

வீணான செயல்களிலும் வீணாண ஆனந்தங்களிலும் முழ்கி நேரத்தை நாம் இழக்காமல் இருப்போம். விலைமதிக்கயியலாத நேரம் அல்லாஹ் நமக்கு வழங்கியதாகும் ஆகும். அல்லாஹ்வின் மார்க்கத்திற்காகவும் இஸ்லாமிற்காகவும் நமது வாழ்க்கையினை சமர்பித்துக் கொள்வோம். ஒவ்வொரு ஆன்மாவுடையவும் லட்சியவும், வழியும், சிந்தனையும் அதுவேயாகட்டும்! அது வழியாக, இவ்வுலக சோதனைகள் வாயிலாக இறைவனின் பால் சென்றடைவதற்காக உண்மையான பாதையினைக் கண்டு கொள்ள முடியும். இந்த முயற்சியில் அல்லாஹ் நமக்கு உதவி புரிவனாக! இரு உலக மகிழ்ச்சியால் நம்மீது அவன் அருள் புரிவனாக. ஆமீன்!

**Issued by:**

**Jamaat Ul sahih Al Islam Dawa Department**

**Tamil Nadu, India (Regd. No. A/693)**

**Web: www.jamaat-ul-sahih-al-islam.com**

**Translated by:**

**Azim Ahmad**

**E-mail: azimahmad070@gmail.com**

**Cell: 9789180817.**